மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 107/2013

பெயர் : கிட்டுசாமி (எ) கிருஷ்ணசாமி
சாட்சி – பி.வா.சா–2 நாள்: 14.08.2025

---

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)**

1. நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது அம்மாவின் அப்பா பொங்கிய கவுண்டரின் ஊர் வேலாயுதம்பாளையம் ஆகும். எனது அப்பா வழி தாத்தாவின் ஊரும் வேலாயுதம்பாளையம் ஆகும். எனது அம்மாவிற்கு உடன்பிறந்த சகோதரர்கள் 5 பேர் மற்றும் 1 சகோதரி ஆவார்கள். அவர்களின் பெயர் பெரிய மாரப்ப கவுண்டர், சின்ன மாரப்ப கவுண்டர், அம்மாசை கவுண்டர், அப்பாச்சி கவுண்டர் மற்றும் கணபதி கவுண்டர் என்றால் சரிதான். அவரது சகோதரி பெயர் காளியம்மாள் ஆகும். எனது அம்மாவின் பெயர் மாராத்தாள் ஆகும்.

2. எனது அம்மாவின் சகோதரர்களின் வாரிசுகளுடன் எனக்கு நல்ல உறவு முறை உள்ளதா என்றால் அவர்கள் எல்லாம் வெளியூரில் இருக்கிறார்கள் அவர்களுடன் எந்த பேச்சு வார்த்தையும் தற்போது இல்லை. எனது அம்மாவின் சகோதரர்களுக்கு யார் யார் வாரிசுகள் அவர்களின் பெயர்கள் என்ன என்றெல்லாம் எனக்கு தெரியாது. அவர்கள் நான் சிறு வயதில் இருக்கும்போது வெளியூர் சென்று விட்டதால் அவர்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியவில்லை. எனது மகன் திருமணத்திற்கு அவர்களை நான் அழைத்தேனா என்றால் அழைக்கவில்லை.

3. எனது தாய் மாமனின் வாரிசுகள் எங்கு இருக்கிறார்கள் என்ன செய்கிறார்கள் என்ற விவரம் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். தற்போது சாட்சி தானாக முன்வந்து 5 மாமன்களில் 1 மாமன் வேலாயுதம்பாளையத்தில் இருக்கிறார், மற்ற 4 பேர் ஒண்டிப்புதூர் சென்று விட்டார்கள் என்று கூறுகிறார். அப்பாச்சி கவுண்டர் என்ற தாய் மாமனுக்கு வாரிசுகள் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த சமயத்தில் எனது சகோதரர் வழக்கறிஞர் அலுவலகம் சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் சென்றேன். வழக்கிற்கான விவரங்களை எனது சகோதரர்தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தார்.

4. எனது சகோதரர் வழக்கறிஞரிடம் விவரங்கள் கூறும்போது நான் அருகில் தான் இருந்தேனா என்றால் அந்த சமயத்தில் எனக்கு உடல்நிலை சரியில்லாமலும், காது சரியாக கேட்காமல் இருந்ததால் நான் அவர் கூறியதை கவனிக்கவில்லை. எந்த வழக்கறிஞரை சென்று சந்தித்தோம் என்றால் திருப்பூரில் உள்ள வழக்கறிஞரை சந்தித்தோம். அவர் பெயர் எனக்கு நினைவில் இல்லை. எனது சகோதரர் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்தேன் என்று என்னிடம் விபரம் ஏதும் தெரிவித்தாரா என்றால் நான் கேட்கவில்லை. வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொன்னார்.

5. என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொன்னார் என்றால் எதிர் தரப்பினர் நாங்கள் கிரயம் செய்துள்ளது செல்லாது என்று போட்டுள்ளதாக சொன்னார். எனக்கு தற்போது எத்தனை வயது என்றால் 67 வயது ஆகும். 1977 ஆம் ஆண்டு எனக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் 15 வயது இருக்கும். எனது அண்ணன் நடராஜன் என்னை விட 6 வயது மூத்தவர். எனது தாய் மாமன் சின்ன மரப்ப கவுண்டர் இடமிருந்து எனது தந்தை சொத்து வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் அவர் 1960 ஆம் ஆண்டு கிரயம் வாங்கினார். அப்போது எனக்கு 5 வயது இருக்கும்.

6. 1960 ஆம் ஆண்டு சின்ன மாரப்ப கவுண்டர் இடமிருந்து எனது தந்தை கிரயம் பெற்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் எனக்கு 20 வயது இருக்கும்போது எனது அண்ணன் சொன்னார். அந்த சொத்தை நாங்கள் விற்று விட்டோம் என்றால் சரிதான். எந்த ஆண்டு விற்றோம் என்றால் 1981 ஆம் ஆண்டு விற்றோம். விற்கும்போது 1960 ஆம் ஆண்டு கிரைய பத்திரத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. 1981 ஆம் ஆண்டு நாங்கள் சொத்தினை விற்கும் போது எவ்வளவு தொகைக்கு விற்றோம் என்று எனக்கு நினைவில் உள்ளதா என்றால் ரூபாய் 2000/–ற்கு விற்றோம். அந்த சொத்தின் சர்வே எண் க.ச.89/2 ஆகும். அதன் விஸ்தீரணம் 78 ¼ சென்ட் ஆகும்.

7. 1960 ஆம் ஆண்டு அந்த சொத்தை எனது தந்தை வாங்கிய போது அந்த சொத்தின் கிரையத்தொகை ரூபாய் 400/– என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரனமும் 78 ¼ சென்ட் என்றால் சரிதான். தாவா சொத்தினை ஒட்டி மேல்புறம் உள்ள சொத்தினைத்தான் நாங்கள் விற்றோம் என்றால் சரிதான். 1981 ஆம் ஆண்டு கிரைய பத்திரத்தினை யார் தயார் செய்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. தயார் செய்ததற்கு யார் விவரம் சொன்னார்கள் என்றால் நினைவில் இல்லை.

8. வா.சா.ஆ.6 1981 ஆம் ஆண்டு கிரைய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரங்கள் குறிப்பிட்டுள்ளது தான் நாங்கள் விற்றோம் என்றால், நாங்கள் படித்துப் பார்க்காமல் கையெழுத்து போட்டு விட்டோம் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர்தான் பெரியமாரப்ப கவுண்டர் பங்குக்கு மேற்கு என்று தவறாக எழுதி உள்ளது எங்களுக்கு தெரியவந்தது. வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் பிழை உள்ளது என்று எனது எதிர் வழக்குரையிலோ, எனது நிரூபன வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், எனது எதிர் வழக்குரையிலோ, எனது நிரூபன வாக்குமூலத்திலோ அவ்வாறு பிழை உள்ளதாக நான் எதையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

9. எனக்கு முன்பு இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ள எனது அண்ணன் மகனிடம் மேற்படி கேள்வி கேட்கப்பட்டதால் அதனை சரி செய்வதற்காக நான் அவ்வாறு சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1981 ஆம் ஆண்டு நான் விற்ற பூமிக்கு கீழ்ப்புறம் பெரிய மாரப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூமி தான் இருந்தது என்றால் சரிதான். பின்பு சாட்சி தானாக முன்வந்து சரியல்ல என்று கூறுகிறார்.

10. நாங்கள் தாக்கல் செய்துள்ள 1977 ஆம் ஆண்டு பத்திரம் தயாரித்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தை தான் அதனை தயார் செய்தார். மேற்படி பத்திரம் தயார் செய்த விவரம் எனது அண்ணனுக்கு தெரியுமா என்றால் எனது அண்ணனிடம் கேட்டால் தான் தெரியும். எனது நிரூபன வாக்குமூலத்தின் பத்தி 5 ல் அசல் பாக சாசன ஆவணத்தையும் அவரிடம் ஒப்படைத்து விட்டார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அது எந்த அசல் பாகசாசனம் ஆவணம் என்றோ, யார் யார் செய்து கொண்டார்கள் என்றோ எனக்கு தெரியாது. மேற்படி சங்கதிகளை எனது அண்ணன் சொல்லி நான் தெரிந்து கொண்டதாக தான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

11. தாவா சொத்து தற்போதும் காலிபூமியாகத்தான் உள்ளது என்றால் சரிதான் விவசாயம் செய்து வருகிறோம். நான் சொல்வதை தவறு என்றும், விவசாயம் எதுவும் செய்யப்படவில்லை என்றும் தரிசாகத்தான் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் நாங்கள் சொத்துரிமை கோருகிறோம் என்றால் சரிதான். பெரிய மாரப்ப கவுண்டரின் மனைவி எந்த ஊர் என்றால் வேலாயுதம்பாளையம் தான். அவரது பெயர் என்ன என்று எனக்கு தெரியாது. பெரிய மாரப்பக்கவுண்டர்

இறப்பதற்கு முன்பே அவர் இறந்து விட்டார். தனது மனைவி இறந்த பின்பு பெரிய மாரப்ப கவுண்டர் எத்தனை ஆண்டுகள் கழித்து இறந்தார் என்றால் சுமார் 30 ஆண்டுகள் கழித்து இறந்தார்.

12. பெரிய மாரப்ப கவுண்டரின் மனைவியை நான் பார்த்துள்ளேனா என்றால் சிறுவயதில் பார்த்துள்ளேன். ஒண்டிப்புதூரில் உள்ள தாய் மாமன்களில் ஒருவரின் மகன் பெயர் வேலுச்சாமி என்றால் சரிதான். அவர் என்னைவிட பத்து வயது மூத்தவர் என்றால் எனக்கு தெரியாது. நான் எப்போதாவது அவர் வீட்டிற்கு சென்றுள்ளேனா என்றால் விசேஷங்களுக்கு சென்றுள்ளேன். வேலுச்சாமி வீட்டுக்கு அருகில் தான் காளியம்மாள், மசாத்தாள் ஆகியோர் வசித்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

13. பெரிய மாரப்ப கவுண்டர் அவரது மனைவி இறந்த பின்னர் ஒண்டிப்புதூரில் உள்ள அவரது மகள்கள் வீட்டில் இருந்தார் என்றால் ஒரு 5, 6 வருடங்கள் இருந்திருப்பார் பின்னர் வேலாயுதம்பாளையம் வந்துவிட்டார். நான் சொல்வது தவறு என்றும் அவர் இறக்கும் வரை ஒண்டிப்புதூரில் தான் இருந்தார் என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.08.14 18:28:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.